# කාර්යසාධන වාර්තාව
# செயற்பாட்டு அறிக்கை
# Performance Report



2014

ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத்
திணைக்களம்
நிதி திட்டமிடல் அமைச்சு

Department of Project Management and Monitoring
Ministry of Finance and Planning

# பொருளடக்கம்


1. அறிமுகம் ............................................................................... ....... 1

2. தொலைநோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள் .............................. 2

3. நிறுவன கட்டமைப்பு ............................................................... 3-4

3.1 திணைக்களத்தின் ஆளணி விபரம்............................................... 3

3.2 பாதீட்டு தகவல்கள்....................................................................... 4

4. திணைக்களத்தின் தொழிற்பாடுகள்............................................................ 4-11

4.1 கண்காணிப்பு முறைகள் ............................................................. 5-7

4.1.1 ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமை.............. 5-6

4.1.2 நிரல் அமைச்சுக்களின் காலாண்டு கருத்திட்ட கண்காணிப்பு........ 6-7

4.1.3 முன்னேற்ற அறிக்கை ஊடாக கண்காணிப்பு................................ 7

4.2 தேசிய செயற்பாட்டு மையம்.................................................... 7

4.3 களவிஜயங்கள் ஊடாக கண்காணிப்பு...................................................... 7-9

4.4 விசேட கூட்டங்கள் ஊடாக கண்காணிப்பு................................................ 10

4.5 கருத்திட்ட மதிப்பீடு மற்றும் கண்டறிதலை அறியச்செய்தல் ..................... 10-11

5. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழினுட்ப.............. 11-12
உதவித்திட்டம்- கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு
திணைக்களத்தினை மூலோபாய ரீதியில் நிலைநிறுத்தல்

6. இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள் ................................ 12-13

6.1 2013ம் ஆண்டு அபிவிருத்தி செயற்பாடுகளின் சமர்ப்பிப்பு......................... 12

6.2 தேசத்திற்கு மகுடம் கண்காட்சியுடன் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி .... 12
வேலைகளின் கண்காணிப்பு

6.3 பாதீட்டு முன்மொழிவுகளின் கண்காணிப்பு ................................................ 12

6.4 போசண மல்ல நிகழ்ச்சித்திட்ட மதிப்பீடு.................................................... 13

7. அலுவலர் பயிற்சி மற்றும் ஆளணி மேம்பாடு.......................................... 13-14

இணைப்புக்கள்

இணைப்பு 1 - விபரமான நிறுவன கட்டமைப்பு

இணைப்பு 2 - விபரமான நிதி அறிக்கை

## 01. அறிமுகம்

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் ஆனது கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்வதற்கு பொறுப்பாக உள்ளதுடன் திட்டங்கள் சுமுகமான முறையில் உரிய நேரத்தில் அமுல்படுத்தப்படுவதையும் உறுதி செய்கின்றது.

பத்தாண்டு ஆண்டு தேசிய அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமமான பிராந்திய அபிவிருத்தி என்பனவற்றை அடைவதே நாட்டினுடைய குறிக்கோள்களாகும். நாட்டின் குறிக்கோள்களை அடைவதற்கு, இத் திணைக்களம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புகளை மேற்கொள்வதன் மூலமும் அவற்றின் நிலமைகளை ஆராய்வதன் மூலமும் கருத்திட்டங்கள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுவதற்கு உரிய வழிகாட்டல்களை வழங்குகின்றது. நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் இத் திணைக்களம் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது.

இதற்காக இத்திணைக்களம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பினை சக்திப்படுத்துவதற்காகவும் அபிவிருத்தியின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காகவும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமையினை அறிமுகப்படுத்தியது. மேலும் நிரல் அமைச்சுக்களின் பாதீட்டு செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக தனியான முறைமை பேணப்பட்டு வருகின்றது. தேசிய செயற்பாட்டு மையமானது மத்திய தகவல் நிலையமாகக் காணப்படுவதுடன் அபிவிருத்தித் தகவல்களை கண்காணிப்பு நோக்கங்களிற்காக ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமை ஊடாக கொள்கை வகுப்பாளர்களுக்கும் அபிவிருத்தி பங்காளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் பொதுமக்களுக்கும் உரிய நேரத்தில் தரமான பாவனையாளர் சிநேக பூர்வமான அபிவிருத்தி தகவல்களை இலத்திரனியல் மற்றும் ஒலி மற்றும் காட்சி வடிவில் வழங்குகின்றது.

மேலும் இத்திணைக்களம் திட்ட அமுலாக்கலில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நிரல் அமைச்சுக்கள், அபிவிருத்தி பங்காளர்கள், கருத்திட்ட அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் துறை ரீதியான மீளாய்வு மற்றும் முன்னேற்ற மீளாய்வு என்பனவற்றை நடாத்தி அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வசதி செய்கின்றது. மேலும் கள நிலைமைகளை ஆராய்வதற்காகவும் ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமை மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் ஊடாக பெறப்படும் தகவல்கள் சரியாக உளளனவா என்பதை கண்டறிவதற்காகவும் களவிஜயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திணைக்களத்தின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்காகவும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்வதற்காகவும் 4 பிரிவுகள் காணப்படுகின்றன. இப்பிரிவுகளின் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக நிதி மற்றும் நிர்வாகப் பிரிவுகள் காணப்படுகின்றன. இத்திணைக்களத்தின் நிதியாண்டு 2014 இன் செயற்பாடுகள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 02. தொலைநோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

செயற்பாடுகளின் முக்கிய நோக்கம் நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள் என்பவற்றில் குறிப்பிடப்பட்டவாறு அரசாங்கத்தின் இலக்குகளையும் விளைவுகளையும் அடைவதாகும்.

### தொலைநோக்கு

நற்பயன் அளிக்கக்கூடிய அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு பிரதான பங்காளியாக இருத்தல்

### செயற்பணி

அபிவிருத்தி நோக்குகளின் அடைவுகளையும் விளைவுகளையும் உறுதிப்படுத்துவதற்கு கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளையும் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலுக்கான தேசிய மையமொன்றாக செயற்படுதல்

### நோக்கங்கள் / தொழிற்பாடுகள்

i. அரசாங்கத்தின் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை கண்காணித்து மீளாய்வு செய்தல்.

ii. வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களின் அமுலாக்கத்தை கண்காணித்தல், வெளிநாட்டு உதவிகளை பயன்படுத்தலும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் அமுலாக்கத்தை துரிதப்படுத்துவதற்கு தேவையான இடையீடுகளை செய்தலும்

iii. தேசிய வரவு செலவுத்திட்டத்தின் வினைத்திறன்மிக்க பயனுறுதியான அமுலாக்கத்தை கண்காணித்தல்

iv. வெளிநாட்டு உதவியின் குறைவான பயன்படுத்துகையை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் முழு அளவிலான வெளிநாட்டு நிதியுதவிகளின் விடுவித்தலினை மேம்படுத்தலும்

v. பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னுரிமைத் திட்டங்களை நேரடியாக கண்காணித்தல் மற்றும் துரித பொருளாதார வளர்ச்சிக்காக கருத்திட்டங்களின் துரித அமுலாக்கத்தை உறுதிப்படுத்தல்.

vi. தெரிவுசெய்யப்பட்ட கருத்திட்டங்களில் திட்ட அமுலாக்கத்தின் போதான மதிப்பீடு, பிற்திட்ட மதிப்பீடு என்பவற்றை நடாத்தி திட்டமிடல் செயன்முறைக்கு பின்னூட்டலை வழங்கல்

vii. கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் திட்டமிடலாளர்களுக்கு அபிவிருத்தி தகவல்களை வழங்குவதற்காக இலத்திரனியல் ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமையை பேணிவருகின்றது.

## 03. நிறுவன கட்டமைப்பு

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம் பணிப்பாளர் நாயகத்தினால் தலைமை தாங்கப்படுவதுடன் 4 மேலதிகப் பணிப்பாளர்கள் பின்வரும் 5 பிரிவுகளிற்கும் பொறுப்பாக உள்ளனர்.

1. உட்கட்டமைப்பு அபிவிருத்தி
2. மனிதவள அபிவிருத்தி
3. கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசனம்
4. கைத்தொழில் மற்றும் வர்த்தக அபிவிருத்தி
5. நிதி மற்றும் நிர்வாகம்

முதல் நான்கு பிரிவுகளும் கருத்திட்ட கண்காணிப்பு செயற்பாடுகளில் ஈடுபடும் அதேவேளையில் நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவுகள் இத்திணைக்களத்தின் சேவைகளை வினைத்திறனான முறையில் புரிவதற்கு தெவையான துணைச் சேவைகளை வழங்குகின்றன. விரிவான நிறுவன கட்டமைப்பு இணைப்பு-1 இல் காட்டப்பட்டுள்ளது.

### 3.1 திணைக்களத்தின் ஆளணி விபரம்


கீழ்வரும் அட்டவணை 31 டிசம்பர் 2014 இல் திணைக்களத்தின் ஆளணி விபரத்தினைக் காட்டுகின்றது.

**அட்டவணை- 01**
**திணைக்களத்தின் ஆளணி விபரம்**

| பிரிவு | அனுமதிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடம் |
|---|---|---|---|
| நிறைவேற்று தர அலுவலர்கள் | 35 | 21 | 14 |
| மூன்றாம் நிலை அலுவலர்கள் | 01 | 01 | - |
| இரண்டாம் நிலை அலுவலர்கள் | 35 | 24 | 11 |
| முதல் நிலை அலுவலர்கள் | 18 | 14 | 04 |
| **மொத்தம்** | **89** | **60** | **29** |

### 3.2 பாதீட்டு தகவல்கள்

2014 ம் ஆண்டுக்கான மூலதன செலவினம் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பவற்றின் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு மற்றும் அவற்றின் முன்னேற்றம் என்பன வரைபு 01 இல் காட்டப்பட்டுள்ளது. (விரிவான நிதி அறிக்கை இணைப்பு-2 இல் காட்டப்பட்டுள்ளது.




## 4. திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

தேசிய அபிவிருத்தி வேலைச்சட்டகத்தில் குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி குறிக்கோள்களை உறுதிப்படுத்துவதற்காக சமூக மற்றும் பிராந்திய வேறுபாடுகளை குறைப்பதன் மூலம் இலக்காகக் கொள்ளப்பட்ட உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்காக விரிவான தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது.

அதற்கிணங்க, வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு இணங்கிய வகையில் தேவைகளையும் குறைபாடுகளையும் நிறைவேற்றும் வகையில் பல்வேறு துறைகளில் பெருந்தொகையான கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க, அரசாங்கத்தினால் முக்கிய தொனிப்பொருட்களின் கீழ் 2,262 சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் கருத்திட்டங்களும் இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இக்கருத்திட்டங்களில் 357 கருத்திட்டங்கள் மதிப்பிடப்பட்ட செயற்திட்ட செலவு ரூபா 500 மில்லியனை விஞ்சிய பாரிய கருத்திட்டங்களாகக் காணப்படுகின்றன.

**அட்டவணை- 02**

**மொத்த செலவு மதிப்பீட்டின் அடிப்படையில்**
**செயற்திட்ட வகைப்படுத்தல் (ரூபா.மில்)**

| நிதி மூலம் | 500< | 500- 50 | 50> | மொத்தம் |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு | 164 | 37 | 16 | 217 |
| உள்நாட்டு | 193 | 852 | 1,000 | 2,045 |
| **மொத்தம்** | **357** | **889** | **1,016** | **2,262** |

அரசாங்க முதலீடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள வளங்கள் வினைத்திறனுடனும் பயனுறுதி வாய்ந்த முறையிலும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக இவ் அபிவிருத்தி செயற்திட்டங்களை முறையாகவும் தொடர்ச்சியாகவும் மேற்பார்வை செய்தல், அவசியமான சந்தர்ப்பங்களில் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் ஆகிய பொறுப்புக்கள் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2014 ம் ஆண்டில் திணைக்களத்திடம் காணப்பட்ட கீழே விபரிக்கப்பட்டுள்ள பல்வேறு கண்காணிப்பு முறைகளைப் பயன்படுத்தி இச் செயற்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் திணைக்களத்தினால் கண்காணிக்கப்படுகின்றன.

### 4.1 கண்காணிப்பு முறைகள்

2013 ம் ஆண்டில் இவ் அபிவிருத்தி செயற்திட்டங்களினதும் நிகழ்ச்சித்திட்டங்களினதும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் பணி இலத்திரனியல் மென்பொருள் தொகுதி, செயற்திட்ட அறிக்கைகள், களவிஜய அறிக்கைகள், விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பவற்றினூடாக பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு முறையின் கீழும் அடையப்பெற்ற முன்னேற்றங்கள் வருமாறு

#### 4.1.1 ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமை

இத்திணைக்களம் வெளிநாட்டு நிதியுதவியுடனும் அரச நிதியுதவியுடனும் அமுலாக்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை முகாமை செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமையொன்றை பேணி வருகின்றது. இம் முறையானது மாதாந்த அடிப்படையில் கருத்திட்டங்கங்களை கண்காணிப்பதற்கு வசதி செய்வதுடன் கருத்திட்டங்கள் உடன்பட்ட காலத்தினுள்ளும் கிரயத்தினுள்ளும் அமுலாக்கப்படுவதை உறுதி செய்கின்றது. மேலும் நிரல் அமைச்சுகளின் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவுகளையும் காலாண்டு அடிப்படையில் கண்காணிப்பதற்கு வசதி செய்கின்றது.

இம்முறைமையில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறுத்தப்படும் வரையில் பேணப்படுகின்றன. அதற்கிணங்க, 2014 ம் ஆண்டு இறுதியில் 136 வெளிநாட்டு நிதி உதவியுடன் அமுலாக்கப்படும் கிரய மதிப்பீடு ரூபா 500 மில்லியனிற்கு மேற்பட்ட கருத்திட்டங்கள் இம்முறைமையில் காணப்படுவதுடன் இவை மாதாந்த அடிப்படையில் கருத்திட்ட அலுவலர்களால் இற்றைப்படுத்தப்படுகின்றன. இத் தரவுகளைப் பயன்படுத்தி பிரச்சனைகளை அறிந்து அவற்றினை துரிதகதியில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சுமுகமான அமுலாக்கலை உறுதி செய்கின்றது.

இது கருத்திட்டங்களை பாகுபடுத்தி தரவுகளை வகைப்படுத்துவதற்கான சிநேக பூர்வமான வசதிகளைக் கொண்டுள்ளது. இம்முறைமையானது துறைகள் ரீதியாக, அமைச்சுக்கள் ரீதியாக, மாகாண ரீதியாக, மாவட்ட ரீதியாக, நிதி வழங்கும் நிறுவகங்கள் ரீதியாக, அமுல்படுத்தும் நிறுவனங்கள் ரீதியாக மற்றும் கருத்திட்ட நிலமைகள் ரீதியாக தரவுகளை வகைப்படுத்தவும் அறிக்கைகளை தயாரிப்பதற்கும் வசதிகளைக் கொண்டுள்ளது. இது பொதுமக்கள் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு வசதி செய்வதுடன் வெளிப்படுத்தலையும் நல்லாட்சியையும் ஏற்பட வழி செய்கின்றது.

***2014ம் ஆண்டில் 278 கருத்திட்ட மற்றும் நிரல் அமைச்சுகளின் அலுவலர்கள் இம்முறைமையினைப் பயன்படுத்துவதிலும் தரவுகளை இம்முறைமையில் இற்றைப்படுத்துவதிலும் பயிற்சியளிக்கப்பட்டனர்.***

இந்த வகையில், இம்முறைமையின் ஊடாக 2014 ம் ஆண்டில் ஒல்வொரு துறையிலும் கண்காணிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை கீழே தரப்படுகின்றது.

**அட்டவணை-4**

**துறை ரீதியாக ஒருங்கிணைந்த அபிவிருத்தித் தகவல் தொகுதியின் ஊடாக கண்காணிப்பு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் - 2014**

| துறை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வீதிகள் மற்றும் போக்குவரத்து | 47 |
| நீர்வழங்கல் மற்றும் துப்புரவு | 22 |
| மின்சாரம் | 21 |
| சுகாதாரம் | 07 |
| கல்வி மற்றும் திறன்கள் அபிவிருத்தி | 06 |
| கமத்தொழில்,பெருந்தோட்டம், காணி மற்றும் நீர்ப்பாசனம் | 10 |
| கைத்தொழில், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் | 05 |
| கிராமிய பொருளாதார அபிவிருத்தி | 09 |
| துறைமுக அபிவிருத்தி | 05 |
| நிதி | 01 |
| தொடர்பாடல் மற்றும் ஊடகம் | 01 |
| சுற்றாடல் | 01 |
| மீன்பிடி | 02 |

### 4.1.2 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை காலாண்டு அறிக்கைகளின் ஊடாகக் கண்காணித்தல்

நிரல் அமைச்சுகளினால் வெளிநாட்டு நிதியுதவியுடனும் அரச நிதியுதவியுடனும் அமுலாக்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை காலாண்டு அடிப்படையில் கண்காணிப்பு செய்வதற்காக இத்திணைக்களம் மேலதிகமான ஒரு இணையத்தள இலத்திரனியல் முறைமையொன்றை பேணிவருகின்றது. இது கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை காலாண்டு அடிப்படையில் பெறுவதற்கு உதவுகின்றது.

அபிவிருத்தி கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் உரிய நிதியாண்டில் அவற்றின் மொத்த ஒதுக்கீடு மற்றும் செலவுகளின் முன்னேற்றம் மற்றும் பின்னடைவானவையா, உரிய நேரத்தில் அமுல்படுத்தப்படுபவையா அல்லது இடைநிறுத்தப்பட்டவையா என்பன போன்ற விடயங்கள் தொடர்பில் இத்திணைக்களம் கருத்திட்ட முகாமையாளர்கள் மற்றும் நிரல் அமைச்சுக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் அதேவேளை பின்னடைவுக்கான காரணங்கள் ஆராயப்பட்டு தேவையான இடையீடுகள் மூலம் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு தேவையான லழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன.

2014 ம் ஆண்டின் இறுதியில் கிரய மதிப்பீடு ரூபா 500 மில்லியனிற்கு மேற்பட்ட 197 வெளிநாட்டு நிதியுதவியுடன் அமுலாக்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களும் 1,052 அரச நிதியுதவியுடனும் அமுலாக்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களும் இம்முறைமையில்

காணப்படுவதோடு இத்தகவல்களைப் பயன்படுத்தி ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்வு அறிக்கைகளை தயாரித்ததன் மூலம் உயர்மட்ட அதிகாரிகள் நிரல் அமைச்சுக்களின் வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்களின் போது தீர்மானங்களை எடுப்பதற்கு வசதிப்படுத்தப்பட்டனர்.

**அட்டவணை-4**

**வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்களுக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கைகள்**

| துறை | அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|
| பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 09 |
| மனிதவள அபிவிருத்தி | 25 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகம் | 18 |
| விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் | 08 |

### 4.1.3 முன்னேற்ற அறிக்கைகள் மூலம் கண்காணிப்பு

இந்த முறைமைகளில் உள்ளடக்கப்படாத செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் நேரடியாக நிரல் அமைச்சுகளிடமிருந்து காலாண்டு அடிப்படையில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதுடன் இத்திணைக்களம் அறிவிக்கப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பிரச்சனைகளை அடையாளம் கண்டு கண்காணிப்புகளை மேற்கொள்ளும்.

## 4.2 தேசிய செயற்பாட்டு மைய பராமரிப்பு

தேசிய செயற்பாட்டு மையமானது அரசாங்கத்தின் அபிவிருத்தி தொடர்பான தீர்மானம் எடுத்தலுக்கான ஒரு முக்கிய வசதி ஏற்பாட்டு மத்திய நிலையமாக பராமரிக்கப்பட்டு வருகின்றது. செயற்திட்ட முகாமையைப் பலப்படுத்தும் நோக்கில் இவ்வசதிகளைப் பலப்படுத்தி நவீன கட்புல செவிப்புல ஊடகங்களின் ஊடாக 2014ம் ஆண்டில் கொள்கை வகுப்பாளர்கள், அபிவிருத்தி திட்டமிடலாளர்கள், கொடை வழங்குனர்கள், ஒப்பந்தகாரர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

இவ்வாண்டில் தேசிய செயற்பாட்டு மையமானது தொழினுட்ப வசதிகளுடன் மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் இதன் பயனுறுதிமிக்க பாவனையானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## 4.3 கள விஜயங்கள் ஊடாக முன்னேற்றத்தைக் கண்காணித்தல்

கள விஜயங்கள் கருத்திட்ட கண்காணிப்பில் முக்கிய அங்கமாகக் காணப்படுகின்றது. ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமையினூடாகவும் காலாண்டு அறிக்கைகளினூடாக பெறப்படும் தகவல்களிற்க மேலதிகமாக இத்திணைக்கள அலுவலர்கள் களவிஜயங்களை மேற்கொண்டு கருத்திட்டம் தொடர்பான நேரடியான முன்னேற்றத்தினையும் அமுலாக்கல் பிரச்சனைகள் தொடர்பான தரவுகளையும்

சேகரிக்கின்றனர். அத்துடன் பயனாளிகளிடமிருந்தும் கருத்திட்டம் தொடர்பான கருத்துக்கள் பெறப்படுகின்றன. இக்கள விஜயங்களின் போது பயனாளிகளிடமிருந்தும் ஏனைய பங்குதாரர்களிடமிருந்தும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், தேவைப்படுமிடத்து கருத்திட்டத்தின் வினைத்திறனையும் செயற்திறனையும் அதிகரிப்பதற்கான இடையீடுகள் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அபிவிருத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போது உண்மை நிலையை விளங்கிக்கொள்வதற்கு கள விஜயங்கள் உதவியாக அமைகின்றன. செயற்திட்ட அலுவலர்களால் இலத்திரனியல் முறைமைகளில் உள்ளீடு செய்யப்படும் தகவல்களை ஒப்பீட்டு ரீதியில் பகுப்பாய்வு செய்யும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கின்றது. மேலும் சூழவுள்ள பகுதிகளில் காணப்படும் தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சனைகள் என்பனவும் கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு அவற்றிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவி செய்கின்றது. எனவே கள விஜயங்கள் கருத்திட்ட செயற்பாடுகளின் முன்னேற்றத்திற்கு கணிசமான உதவி செய்கின்றது. 2014 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 46 கள விஜயங்கள் பல்வேறு தரப்பட்ட கருத்திட்டங்களிற்கு மேற்கொள்ளப்பட்டதுடன் அவதானிப்புக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அத்துடன் அனேகமான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை-5**
**கள விஜயங்கள் ஊடாக் கண்காணித்தல் - 2014**

| துறை | களவிஜயங்களின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட பிரச்சனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கல்வி | 01 | 04 |
| விவசாயம் | 02 | 01 |
| சுகாதாரம் | 03 | 02 |
| கைத்தொழில் | 13 | 09 |
| வீதி மற்றும் போக்குவரத்து | 05 | 04 |
| நீர் வழங்கல் | 03 | 03 |

**பெரும்பாக கொழும்பு நீர் புனருத்தாரன கருத்திட்டத்தின் மீதான அவதானிப்புக்கள்**







மாளிகாகந்தை தரை நீர்த்தேக்க நிர்மாணம்

பேராதெனிய பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மீதான அவதானிப்புகள்





மடு - தலைமன்னார் புகையிரத பாதை மீதான அவதானிப்புகள்









### 4.4 விசேட கூட்டங்கள் ஊடாக கண்காணிப்பு

2014 ம் ஆண்டு இத்திணைக்களம் பாரிய கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்காக பல்வேறு கூட்டங்களை கருத்திட்ட முகாமையாளர்கள், நிரல் அமைச்சு அலுவலர்கள், திறைசேரியின் திணைக்களங்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதான நிறுவனங்கள் ஆகியோருடன் நடாத்தி உள்ளது. மேலும் இத்திணைக்களத்தின் அலுவலர்கள் வேறு நிறுவனங்களால் நடாத்தப்படும் கூட்டங்களில் பங்குபற்றியுள்ளனர். முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்காக தேவைப்படுமிடத்து இத்திணைக்களத்தினால் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான இடையீடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. உட்கட்டமைப்பு துறை சார்ந்த நீர்வழங்கல், மின்சக்தி மற்றும் எரிசக்தி, நீர்ப்பாசனம், நெடுஞ்சாலைகள் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான கருத்திட்டங்களின் முன்னேற்றங்களை மீளாய்வு மற்றும் மதிப்பீடு செய்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

2014 ம் ஆண்டு இத்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மற்றும் பங்குபற்றப்பட்ட கூட்டங்கள் மற்றும் கலந்தரையாடல்களின் விபரம் துறைரீதியாக அட்டவணை 06 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 06**
**கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் - 2014**

| கூட்டங்கள் / கலந்துரையாடல்கள் | எண்ணிக்கை |
|---|---|
| முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் | 59 |
| துறைசார் மீளாய்வுக் கூட்டங்கள் | 09 |
| நிதி வழங்குனர்களுடனான மீளாய்வுக் கூட்டங்கள் | 20 |
| திட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் / வழிபடுத்தும் குழு கூட்டங்கள் | 49 |
| விசேட கூட்டங்கள் / கலந்துரையாடல்கள் | 50 |

### 4.5 கருத்திட்ட மதிப்பீடு மற்றும் கண்டுபிடிப்புக்களைப் பரப்புதல்

#### 4.5.1 மதிப்பீட்டு தகவல் முறைமை

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் கருத்திட்டங்களை அமுலாக்கும் போதான, கருத்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்ட பின்னரான மற்றும் பயன்களை அறிவதற்கான மதிப்பீட்டின் காண்புகள், படித்த பாடங்கள் என்பனவற்றை கொண்ட ஒரு மத்திய இலத்திரனியல் மதிப்பீட்டு தகவல் முறைமையை இத்திணைக்களம் பேணி வருகின்றது. அதன் பிரதான நோக்கம் காண்புகளை பயன்வலுவுள்ள பின்னூட்டலாக திட்டமிடல் வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு மற்றும் கொள்கை உருவாக்கத்தில் உறுதிப்படுத்தும் வகையில் மதிப்பீட்டு தகவல் முறைமையொன்றினை திணைக்களம் ஒழுங்காகப் பேணிவருகின்றது. இந்த மதிப்பீட்டு தகவல் முறைமையானது, கருத்திட்டங்களின் காண்புகள், பாடங்கள், பின்னூட்டற் செயற்பாடுகள் மற்றும் பரிந்துரைகளினை சுருக்கங்களை உள்ளடக்கியுள்ளது. 46 கருத்திட்டங்கள் மீதான மதிப்பீட்டுத் தகவல்கள் இந்த முறைமையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2014ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மூன்று மதிப்பீடுகளின் அறிக்கைகள் திணைக்களத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 4.5.2 கருத்திட்ட மதிப்பீடு

இத்திணைக்களம் காலத்துக்கு காலம் கருத்திட்டங்களை அமுலாக்கும் போதான மற்றும் கருத்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்ட பின்னரான மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது. நிதி திட்டமிடல் அமைச்சு, தேசிய பாதீட்டு திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் கோரிக்கைகளிற்கு அமைவாகவும் கருத்திட் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2014 ம் ஆண்டு கமிதிரிய கருத்திட்டம், இரண்டாம் தர நகரங்கள் மற்றும் கிராமிய சமூகம் சார்ந்த நீர்வழங்கல் மற்றும் சுகாதார கருத்திட்டம் (கிராமிய நீர் வழங்கல் - அனுராதபுர மாவட்டம்) மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான கைத்தொழில் பேட்டைகள் தொடர்பான துரித மதிப்பீடுகள் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

## 5. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (ஐ.நா.அ.நி) தொழினுட்ப உதவிக் கருத்திட்டம் - கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தினை மூலோபாய ரீதியில் நிலைப்படுத்தல்

இத்திட்டத்தின் நோக்கம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தினை கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பிரச்சனைகளைத் தீர்த்தல் என்பவற்றில் சிறப்பான மையமாக உருவாக்கி திட்ட மேவாண்மை மற்றும் திட்ட முகாமைத்துவத்தில் அதனை மூலோபாய ரீதியாக நிலைப்படுத்தலாகும்.

2014 ம் ஆண்டு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன

- கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் அலுவலர்களுக்கு திறன் அபிவிருத்தியின் ஒரு பகுதியாக மேலே குறிப்பிடப்பட்ட மூன்று கருத்திட்ட மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. வரைபு அறிக்கைகள், பங்குதாரர்கள் கலந்தாலோசனை செயலமர்வில் கலந்துரையாடப்பட்டு பின்னூட்டல்கள் மதிப்பீட்டு அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இவ் அறிக்கைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் காண்புகள், படித்த பாடங்கள், பரிந்துரைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பன சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப் பயிற்சியானது திணைக்கள அலுவலர்களின் கருத்திட்ட மதிப்பீட்டில் செயல்முறை அனுபவங்களை பெற உதவியது.

- 2014 ம் ஆண்டு முதுகலை பட்டப்படிப்பு, டிப்புளோமா மற்றும் தகவல் தொழினுட்ப துறைகளில் தகுதி பெறுவதற்று வசதிப்படுத்தப்பட்டது. அதன் விபரம் வருமாறு :

**அட்டவணை 07**
**ஐ.நா.அ.நி திட்டத்தின்கீழ் வசதியளிக்கப்பட்ட பயிற்சிகள் - 2014**

| நிகழ்ச்சித்திட்டம் | பயிற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| முதுகலை பட்டப்படிப்பு | 4 |
| திறன் அபிவிருத்தி டிப்புளோமா | 8 |
| உயர்தர ஆங்கில கற்கைநெறி | 8 |
| தகவல் தொழினுட்ப பயிற்சி | 3 |

- மேலும் திணைக்கள அலுவலர்களுக்கு நிதி ஒழுங்கு விதிமுறைகள், தாபன கோவை மற்றும் ஆய்வு முறைமைகளில் விரிவுரைகள் நடாத்தப்பட்டன. சகல திணைக்கள அலுவலர்களுக்கும் வெளிக்கள குழு அபிவிருத்தி மற்றும் தலைமைத்துவ பயிற்சி வழங்கப்பட்டது.

- ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமையில் தரவுகளைப் பதிவேற்றம் செய்வதற்கான பயிற்சிகள் வசதி செய்யப்பட்டன.

- தேசிய செயற்பாட்டு மையமானது Laptops (4), Desktops (5), Voice Recorders (2), External Hardware Drives (2) and Digital Cameras (2) என்பனவற்றால் மேலும் சக்திப்படுத்தப்பட்டது.

## 6. 2012 இல் மேற்கொள்ளப்பட்ட விஷேட பணிகள்

### 6.1 "நடுத்தர ஆண்டு செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கை - 2014" சமர்ப்பிப்பு

திறைசேரி செயலாளரின் ஆலோசனைக்கிணங்க நடுத்தர ஆண்டு செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கை – 2014 தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டது. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற எல்லா கருத்திட்டங்களின் நடுத்தரகால முன்னேற்றங்கள் இதில் அடங்கியுள்ளது.

### 6.2 "தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக" அபிவிருத்தி வேலைகளின் மதிப்பீடுகள்

திறைசேரி செயலாளரின் ஆலோசனைக்கிணங்க, இத்திணைக்களமானது தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கான அபிவிருத்தி வேலைகளுக்கான ஒரு துரித மதிப்பீட்டை அருகிலுள்ள மாவட்டங்களில் செயற்படுத்தியது. எல்லா தொடர்புடைய மாவட்டங்களையும் (கேகாலை, குருநாகலை, மற்றும் புத்தளம்) இணைத்து வெளிக்கள பயணங்களின் அவதானங்களின் ஊடாக இவ்மதிப்பீடு செய்யப்பட்டது. மதிப்பீட்டு அறிகைகள் சமர்ப்பிக்கப்பட்டது.

### 6.3 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் கண்காணிப்பு

அதிமேதகு ஜனாதிபதியினால் வரவு செலவு திட்ட உரை 2013 இல் முன்மொழியப்பட்ட நூற்றி பன்னிரண்டு (112) பிரேரணைகள் பல்வேறுபட்ட நிறுவனங்களால் அமுலாக்கப்பட்டன. இது இத்திணைக்களத்தினால் கண்காணிக்கப்பட்டது. முன்மொழிவுகளின் அமுலாக்கலின் முன்னேற்றம் சம்பந்தமான மூன்று ஆய்வு அறிக்கைகள் திறைசேரி செயலாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 6.4 "போசண மல்ல" நிகழ்ச்சித்திட்ட மதிப்பீடு



திறைசேரி செயலாளரின் ஆலோசனைக்கிணங்க, போசண மல்ல தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கான துரித மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகுதிவாய்ந்த சமுர்த்தி பயனாளிகளுக்கு ரூபா 500 மதிப்புள்ள உணவு முத்திரை போசாக்கான உணவுகளை கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படுகின்றது. கேகாலை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் இத் துரித மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் உற்பத்தி நடைமுறைகளிலிருந்து பயனாளிகள் வரை சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் கலந்துரையாடப்பட்டு தகவல்களும் திரட்டப்பட்டன.



மொனராகலை மாவட்டத்தில் பயனாளிகளுடனான கலந்துரையாடல்

காண்புகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையானது இந்நிகழ்ச்சித் திட்டத்தை மேம்படுத்துவதற்காக தீர்மானங்களை மேற்கொள்பவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 6.5 வரட்சி நிவாரண உதவி மற்றும் வரட்சியினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்

வரட்சி நிவாரண உதவி மற்றும் வரட்சியினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இத் திணைக்களத்தினால் கண்காணிப்பு செய்யப்பட்டு அதன் முன்னேற்றம் தொடர்பாக அமைச்சரவைக்கு ஒரு அமைச்சரவைக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது. இவ் அறிக்கையை தயாரிப்பதற்காக 17 மாவட்டங்களில் அமுலாக்கப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் இத் திணைக்களத்தினால் கண்பாணிப்பு முறைமை மூலம் பெறப்பட்டது.

## 7. அலுவலர்கள் பயிற்சி மற்றும் ஆளுமை விருத்தி


இந்த திணைக்களமானது திணைக்கள அலுவலர்களின் ஆளுமையை விருத்தி செய்வதற்காக கருத்திட்ட வடிவமைப்பு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சிகளை வழங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அனைத்து பயிற்சி செயலமர்வுகளும் முடிவடைந்த பின்னர் அப்பயிற்சியின் மூலம் பெறப்பட்ட அறிவையும் திறனையும் ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டதுடன் அதன் மூலம் அவர்களின் முன்வைப்பு ஆற்றலின் விருத்திக்கும் உதவியாக அமைந்தது.

2014 ம் ஆண்டில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பங்கேற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 08**
**அலுவலர்களுக்கான பயிற்சிகள் - 2014**

| பயிற்சி நிகழ்ச்சி | உள்நாடு / வெளிநாடு | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| குறுகியகால பயிற்சி | வெளிநாடு | 08 |
| நெடுங்கால பயிற்சி | வெளிநாடு | 01 |
| குறுகியகால பயிற்சி | உள்நாடு | 13 |
| நெடுங்கால பயிற்சி | உள்நாடு | 01 |
| தமிழ் மொழி | உள்நாடு | 15 |
| சிங்கள மொழி | உள்நாடு | 04 |
| **மொத்தம்** | | **42** |

# Department of Project Management and Monitoring - Organizational Structure 2014



Annex - I

ශීර්ෂ අංකය
**தலைப்பு இல.**
**Head No** — **280**

දෙපාර්තමේන්තුව
**திணைக்களம்**
**Department** —
ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
**கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**
**Department of Project Management & Monitoring**

**වියදම් සාරාංශය**
**செலவுச் சுருக்கம்**
**Summary of Expenditure**

| වැඩසටහන<br>நிகழ்ச்சித் திட்டம்<br>Programme | විස්තරය<br>விவரணம்<br>Discription | 2013<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2014<br>අනුමත ඇස්තමේන්තුව<br>அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு<br>Approved Estimate<br>Rs. | 2014<br>සංශෝධිත ඇස්තමේන්තුව<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>Revised Estimate<br>Rs. | 2014<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2014<br>ඉතිරිය<br>சேமிப்புக்கள்<br>Savings<br>Rs. |
|---|---|---|---|---|---|---|
| 2 | පුනරාවර්තන වියදම<br>மீண்டுவரும் செலவு<br>Recurrent Expenditure | 63,246,687 | 77,975,000 | 64,850,000 | 61,695,802 | 617,198 |
| | මූලධන වියදම<br>மூலதனச் செலவு<br>Capital Expenditure | 4,916,420 | 20,200,000 | 9,200,000 | 9,748,725 | 1,988,275 |
| | එකතුව/மொத்தம்<br>Total | 68,163,107 | 98,175,000 | 74,050,000 | 71,444,527 | 2,605,473 |

ශීර්ෂ අංකය/**தலைப்பு இல**/**Head No :280**

අමාත්‍යාංශය/දෙපාර්තමේන්තුව- ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව

**அமைச்சு/திணைக்களம்: கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**

**Ministry/Department : Department of Project Management & Monitoring**

වැඩ සටහන් අංකය/ **நிகழ்ச்சித் திட்டம் /Programme No:02**

ව්‍යාපෘතිය **01-** ව්‍යාපෘති කළමනාකරණය සහ අධීක්ෂණය

**கருத்திட்டம் :** 01 **கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு**

**Project :01 - Project Management & Monitoring**

පුනරාවර්තන වියදම්/ **மீண்டுவரும் செலவு /Recurrent Expenditure**

| විස්තරය<br>விவரணம்<br>Discription | 2013<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2014<br>අනුමත ඇස්තමේන්තුව<br>அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு<br>Approved Estimate<br>Rs. | 2014<br>සංශෝධිත ඇස්තමේන්තුව<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>Revised Estimate<br>Rs. | 2014<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2014<br>ඉතිරිය<br>சேமிப்புக்கள்<br>Savings<br>Rs. |
|---|---|---|---|---|---|
| පෞද්ගලික පඩි නඩි<br>ஆளுக்குரிய வேதானாதிகள்<br>Personal Emoluments | 25,577,315 | 32,000,000 | 25,829,000 | 25,708,110 | 120,890 |
| වෙනත්<br>ஏனையவை<br>Other | 37,669,372 | 45,975,000 | 36,484,000 | 35,987,692 | 496,308 |
| එකතුව/மொத்தம்<br>Total | 63,246,687 | 77,975,000 | 62,313,000 | 61,695,802 | 617,198 |

ශීර්ෂ අංකය/ **தலைப்பு இல** /**Head No :280**

අමාත්‍යාංශය/දෙපාර්තමේන්තුව- ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව

**அமைச்சு/திணைக்களம்:** கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

**Ministry/Department : Department of Project Management & Monitoring**

වැඩ සටහන් අංකය/ **நிகழ்ச்சித் திட்டம்** /**Programme No:02**

මූලධන වියදම්/ **மூலதனச் செலவு** / **Capital Expenditure**

| මූලධන වියදම / மூலதனச் செலவு Capital Expenditure<br>වැය විෂය අංකය<br>விடய குறியீடு<br>Object Code | විස්තරය<br>விவரணம்<br>Discription | 2013<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2014<br>අනුමත ඇස්තමේන්තුව<br>அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு<br>Approved Estimate<br>Rs. | 2014<br>සංශෝධිත ඇස්තමේන්තුව<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>Revised Estimate<br>Rs. | 2014<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2014<br>ඉතිරිය<br>சேமிப்புக்கள்<br>Savings<br>Rs. |
|---|---|---|---|---|---|---|
| | <u>මූලධන වත්කම් පුනරුත්ථාපනය සහ වැඩි දියුණු කිරීම</u> | | | | | |
| | **<u>மூலதன இருப்புச் சொத்துக்களின் முன்னேற்றம்</u>** | | | | | |
| | **<u>Rehabilitation & Improvement of Capital Assets</u>** | | | | | |
| 2001 | ගොඩනැගිලි හා ඉදිකිරීම් | 245,000 | - | - | - | - |
| | கட்டிடங்களும் அமைப்புக்களும் | | | | | |
| | Bulding & Structure | | | | | |
| 2002 | යන්ත්‍ර හා යන්ත්‍රෝපකරණ | - | 200,000 | 200,000 | 12,347 | 187,653 |
| | இயந்திரவகையும் உபகரணமும் | | | | | - |
| | Plant Machinary & Equipment | | | | | |
| 2003 | වාහන | 539,359 | 500,000 | 500,000 | 189,300 | 310,700 |
| | வாகனங்கள் | | | | | - |
| | Vehicles | | | | | |
| | <u>මූලධන වත්කම් අත්පත් කර ගැනීම</u> | | | | | |
| | **<u>மூலதன இருப்புச் சொத்துக்கள் கைப்பற்றல்</u>** | | | | | |
| | **<u>Acquisition of Capital Assets</u>** | | | | | |
| 2101 | වාහන | - | - | 2,520,000 | 2,520,000 | - |
| 2102 | ගෘහ භාණ්ඩ හා කාර්යාලීයය උපකරණ | 29,190 | - | - | - | |
| | தளபாட காரியாலய உபகரணமும் | | | | | - |
| | Furniture & Office Euipment | | | | | |
| 2103 | යන්ත්‍ර හා යන්ත්‍රෝපකරණ | 625,000 | - | - | - | - |
| | ප්‍රාග්ධන මාරුකිරීම් | | | | | |
| 2401 | මානව සම්පත් සංවර්ධනය හා කාර්ය | 478,140 | 500,000 | 517,000 | 499,998 | 17,002 |
| | කාර්ය මණ්ඩල පුහුණු කිරීම් | | | | | |
| | பயிற்சியும் ஆளுமை விருத்தியும் | | | | | - |
| | Training & Capacity Building | | | | | |
| | ව්‍යාපෘති ඇගැයීම හා වෙබ් අඩවි | | | | | |
| | පාදක කරගත් අධීක්ෂණ පද්ධතිය | | | | | |
| 2502 | වෙනත් ආයෝජන | 2,999,731 | 4,000,000 | 3,000,000 | 2,998,590 | 1,410 |
| | | 4,916,420 | 5,200,000 | 6,737,000 | 6,220,235 | 516,765 |

ශීර්ෂ අංකය/ தலைப்பு இல /Head No :280

වැඩ සටහන් අංකය/ நிகழ்ச்சித் திட்டம் /Programme No: 02

මූලධන වියදම්/ மூலதனச் செலவு / Capital Expenditure

| මූලධන වියදම மூலதனச் செலவு Capital Expenditure | | 2013 සත්‍ය වියදම உள்ளபடி செலவு Actual Expenditure Rs. | 2014 අනුමත ඇස්තමේන්තුව அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு Approved Estimate Rs. | 2014 සංශෝධිත ඇස්තමේන්තුව மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு Revised Estimate Rs. | 2014 සත්‍ය වියදම உள்ளபடி செலவு Actual Expenditure Rs. | 2014 ඉතිරිය சேமிப்புக்கள் Savings Rs. |
|---|---|---|---|---|---|---|
| වැය විෂය අංකය விடய குறியீடு Object Code | විස්තරය விவரணம் Discription | | | | | |
| 2502 | **<u>ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුවේ හැකියා ශක්තිමත් කිරීම</u>**<br>**<u>திட்ட அமுலாக்கலின் ஆற்றலை வலுவடையசெய்தல்</u>**<br>**<u>Strengthening the plan Implementation Capacity</u>**<br>*<u>වෙනත් මූලධන වියදම්</u>*<br>*<u>ஏனைய மூலதன முதலீடு</u>*<br>*<u>Other Capital Expenditure</u>*<br>වෙනත් ආයෝජන<br>ஏனைய முதலீடு<br>Other Capital Investment | - | 15,000,000 | 5,000,000 | 3,528,490 | 1,471,510 |
| 2502 | සංවර්ධන ප්‍රතිඵල කළමනාකරණය<br>அபிவிருத்தி பெறுபேறுகளை முகாமைப்படுத்தல்<br>Managing for Development Results<br>*<u>වෙනත් මූලධන වියදම්</u>*<br>*<u>ஏனைய மூலதன முதலீடு</u>*<br>*<u>Other Capital Expenditure</u>*<br>වෙනත් ආයෝජන<br>ஏனைய முதலீடு<br>Other Capital Investment | | - | - | - | - |
| | **එකතුව / மொத்தம்**<br>**Total** | 4,916,420 | 20,200,000 | 11,737,000 | 9,748,725 | 1,988,275 |

මූල්‍ය ප්‍රභවයන්

**நிதி மூலங்கள்**

**Financial Sources**

| වැඩ සටහන நிகழ்ச்சித் திட்டம் **Programme** | විස්තරය **விவரணம்** **Discription** | | | **2013** සත්‍ය වියදම உள்ளபடி செலவு **Actual Expenditure Rs.** | **2014** අනුමත ඇස්තමේන්තුව அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு **Approved Estimate Rs.** | **2014** සංශෝධිත ඇස්තමේන්තුව மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு **Revised Estimate Rs.** | **2014** සත්‍ය වියදම உள்ளபடி செலவு **Actual Expenditure Rs.** | **2014** ඉතිරිය சேமிப்புக்கள் **Savings Rs.** |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | ඒකාබද්ධ අරමුදල | திட்ட நிதியம் | Consolidated Fund | 68,163,107 | 83,175,000 | 69,050,000 | 67,916,037 | 1,133,963 |
| | විශේෂ නීති සේවා | வசேட சட்டம் | Special Law | - | - | - | - | - |
| | *විදේශාධාර* | *வெளிநாட்டு உதவி* | ***Foreign Aid*** | | | | | |
| | ණය | கடன்கள் | Loans | | | | | |
| | ආධාර | கொடைகள் | Grants | - | 15,000,000 | 5,000,000 | 3,528,490 | 1,471,510 |
| | *ප්‍රතිපූර්ණය කළ හැකි විදේශාධාර* | *மீள்ளிக்கப்படக்கூடிய வெளிநாட்டு உதவி* | ***Reimbursable Foreign Aid*** | | | | | |
| | ණය | கடன்கள் | Loans | - | - | - | - | - |
| | ආධාර | கொடைகள் | Grants | - | - | - | - | - |
| | ප්‍රතිපාර්ශවීය අරමුදල් | எதிரிணை நிதியம் | Counterpart Funds | - | - | - | - | - |
| | විදේශාධාර | *வெளிநாட்டு உகவி* | Foreign Aid | - | - | - | - | - |
| | මුළු වියදම | **மொத்த செலவுகள்** | **Total Expenditure** | 68,163,107 | 98,175,000 | 74,050,000 | 71,444,527 | 2,605,473 |

ශීර්ෂ අංකය/ தலைப்பு இல / Head No :280

අමාත්‍යාංශය/දෙපාර්තමේන්තුව- ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
**அமைச்சு/திணைக்களம்: கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**
**Ministry/Department : Department of Project Management & Monitoring**

**රජයේ නිලධාරීන්ගේ අත්තිකාරම් බී ගිණුම : විෂය අංකය 28001**
**அரச ஊழியர்களுக்கான முற்பண ஆ(B) கணக்கு : விடய இல : 28001**
**Public Officers Advance Accounts :Subject No 28001**

| වර්ෂය / ஆண்டு / Year<br>විස්තරය / **விவரணம்** / Discription | 2013<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2014<br>අනුමත ඇස්තමේන්තුව<br>அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு<br>Approved Estimate<br>Rs. | 2014<br>සංශෝධිත ඇස්තමේන්තුව<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>Revised Estimate<br>Rs. | 2014<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2014<br>සීමා ඉක්මවීම<br>எல்லை மீறிய வரையறை<br>Limits Exceeds<br>Rs. |
|---|---|---|---|---|---|
| ආරම්භක ශේෂය<br>ஆரம்ப மீதி<br>Openning Balance | 12,954,686.11 | | | 11,711,688.86 | |
| වර්ෂයේ හර<br>ஆண்டு கால வரவு<br>Debit in during the year | 4,705,430.50 | 5,000,000.00 | | 5,169,442.14 | |
| එකතුව/ மொத்தம் /Total | 17,660,116.61 | | | 16,881,131.00 | |
| අඩු කළා/ கழி /Less | | | | | |
| වර්ෂයේ මුළු බැර<br>ஆண்டு கால செலவு<br>Credit in during the year | 5,948,427.75 | 2,200,000.00 | | 5,504,399.28 | |
| වර්ෂය අවසානයේ හර<br>ஆண்டு முடிவில் மீதி வரவு<br>End of the year Debit Balance | 11,711,688.86 | 20,000,000.00 | | 11,376,731.72 | |

| <u>සටහන/ குறிப்பு /Note</u> | හර/ வரவு/Debit | බැර/ செலவு/Credit |
|---|---|---|
| වර්ෂයේ සීමාවට බලපාන හර සහ බැර (ශීර්ෂ අංක 280011) | 3,417,283.14 | 2,440,159.78 |
| වර්ෂයේ සීමාවට බල නොපාන හර සහ බැර (ශීර්ෂ අංක 280012) | 1,752,159.00 | 3,064,239.50 |
| එකතුව | 5,169,442.14 | 5,504,399.28 |
| வருடாந்த வரையறைகள் மீது விளைவுளை ஏற்படுத்தும் வரவு செலவுகள் ( விடய இல. 280011 ) | 3,417,283.14 | 2,440,159.78 |
| வருடாந்த வரையறைகள் மீது விளைவுகள் ஏற்படுத்தாத வரவு செலவுகள் ( விடய இல. 280012 ) | | |
| மொத்தம் | 1,752,159.00 | 3,064,239.50 |
| மொத்தம் | 5,169,442.14 | 5,504,399.28 |
| Debit & Credit which affect on Annual limit (Subjects No 280011) | | |
| Debit & Credit which does not affect on Annual limit (Subjects No 280012) | 3,417,283.14 | 2,440,159.78 |
| Total | 1,752,159.00 | 3,064,239.50 |
| | 5,169,442.14 | 5,504,399.28 |